# மேல்நிலைத் தேர்வு மார்ச்சு 2011
## பகுதி-1 தமிழ் இரண்டாம் தாள்
## விடைக் குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள் : 80

விடைத்தாள்கள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

1. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை இல்லாதிருப்பின், முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
2. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
3. தவறான விடைகளை ( X ) குறியிட்டும், தொடர்ப் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப் பிழைகளை ( ∧ ) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
4. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (√ ) குறியிடுதல் வேண்டும்.
5. மிகையாக விடை இருப்பின் ' மிகை ' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
6. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ' மீண்டும் ' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

I. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் 3X4=12

1. நாடகத்தமிழின் சிறப்பியல்புகள் :
   1. கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய போதிய காலம் கிட்டாத பணியாளர்களுக்கும்
   2. படிக்கத் தெரியாதவர்களுக்கும், நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது.
   3. அது கேட்போருக்கும், காண்போருக்கும் இன்பச்சுவைக் கொடுப்பதனால் எளிய மக்களும் அதைக் காண விரும்பிச் செல்கின்றனர்.
   4. கேள்வி இன்பம் தருவதோடு, காட்சி இன்பமும் உடன் தருகின்றது.
   5. இச்சிறப்பினைக் கருதியே பிற நாட்டிலுள்ள பிற மொழி புலவர்கள் நாடகங்களை மதிக்கின்றனர்.



www.kalvisolai.com
(ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்)

2. அ. செம்மொழியின் இலக்கணம் :

1. திருந்திய பண்பும், சீர்த்த நாகரீகமும் பொருந்திய தூய்மொழி
2. சொல்லுபவன் கருதிய பொருளைக் கேட்பவன் தெளிவாக உணரவல்லது தமிழ்
3. பழையன கழிந்தும் புதியன புகுந்தும் திருத்தம் எய்தி நிற்றல்.
4. நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப சொற்களும், மொழிகளும், நாகரிக நலம் விளைவித்தல்.

ஆ செம்மொழியின் இலக்கணம் தமிழ்மொழியின்பால் பொருந்தியிருப்பதன் பாங்கு :

1. ஒரு நாட்டின் முதிர்ச்சிக்கு ஏற்றவாறு சொற்களும் தோன்றி மொழிகளும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும்.
2. அவ்வாறு சொற்கள் தோன்றும்போது, பிறமொழிச் சொற்களல்லாமல் தன் சொற்களே மிகுதல் வேண்டும்.
3. இது உயர்தனி தமிழ்மொழிக்குப் பொருந்துவதால் தமிழ் தூய்மொழி செம்மொழி என்பது திண்ணம்.

3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெரும்கொலை என்று திரு.வி.க.வருந்தி உரைப்பன.

1. பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைப் புதைத்து அவர்தம் உருவத்திற்கு வழிபாடு செய்யும் பொய் ஒழுக்கம்.
2. 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்' என்றும்
3. 'சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்' என்றும் அருளிய பெரியோரை வழிபடுவோர், சாதியையே கடவுளாகவும், சமயமாகவும் கொண்டு ஒழுகுதல்.
4. இவர்கள் சாதியை மறுத்து சமரசத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதால் பொருளில்லை
5. பெரியோர் அறிவுறுத்திய வழியில் நடப்பதே உண்மையான வழிபாடு.

4. கவிதைக்குரிய நல்லியல்புகள் :

1. கவிதைப் புவியினுக்கு அலங்காரமாய், நிறைவான மெய்ப்பொருள் தந்து அறிவு இதுதான் எனச் சுட்டல் வேண்டும்.
2. எல்லாத் துறைகளையும் பெற்று ஐந்திணை ஒழுக்கத்தைத் தழுவி அழகுறத் தெளிந்து குளிர்ந்து இயங்குதல் வேண்டும். இதையே கம்பர்

'புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்'.

எனக் கோதாவரியினைச் சிறப்பிக்கும் முறையில் உரைக்கிறார்.

www.kalvisolai.com
(ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்)

5. <u>பழந்தமிழர் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகிய பாங்கு :</u>

1. தொழில் செய்து வாழநினைத்தனர் - இரத்தலை வெறுத்தனர்.
2. உறுப்பறைகள் மற்றும் பிணியாளர்களுக்கு மட்டுமே விதிவிலக்களித்தனர்.
3. உழைக்காமல் நெல்லை வளையில் சேர்க்கும் எளிய முயற்சியுடைய எலி போன்றோரை அருவருத்தனர்.
4. இடப்பக்கத்தில் வீழ்ந்த பன்றியை உண்ணும் புலி போன்றோரின் பெருமுயற்சியை பாராட்டினர்.

II எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை 3 X 4 =12

6. <u>அறுமுறை வாழ்த்து - விளக்கம் :</u>

1. மக்களால் வாழ்த்தப்படும் ஆறு பொருள்களுள் ஆவும் ஒன்றாயிற்று.
2. முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும் (தொல்காப்பியம் - பொருளதிகாரம் - 81)
3. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் - திருஞானசம்பந்தர்
4. உலகு போற்றிய உயர்ந்த பொருள் வரிசையில் ஆவும் வைத்தல் அறுமுறை வாழ்த்தாகப் பாடப்பெற்றது.

7. <u>இரந்தும் உயிர் வாழ்தல் ' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்கள் :</u>

1. இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்த கெடுக உலகியற்றியான் - திருக்குறள்
2. பிரம்மன் யாசிப்பதை ஒரு தொழிலாக எண்ணினால் அவன் ஒரு பாவி
3. பிரம்மன் மனிதப் பிறவி எடுக்கட்டும்.
4. ஒன்றும் பெறாமல் அழியட்டும், வீதியெங்கும் திரியட்டும்.
5. ஒரு பிச்சைக்காரனின் இயல்பான கோப வெளிப்பாடு.
6. பிச்சைக்காரன் பிரம்மனைப் பற்றி எண்ணுவதைப் போல வள்ளுவர் செய்த நயமான கற்பனை ( குறள் : இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்)

8. <u>முதல் தடுமாற்றம் என்று மு.வ.குறிப்பிடுவன :</u>

1. பள்ளிச் சிறுவன் எழுத்துக் கல்வியின் சிறப்பை உணராமல் பலகையும் பலப்பமும் உயர்ந்தன என எண்ணுவது.
2. மக்கள் கூடிவாழத் தொடங்கியபோது வழிகாட்டிய தலைவனுக்கு முடிசூட்டி, கையில் கோல் கொடுத்தது.
3. சில தலைமுறைகள் கடந்த பிறகு அந்த முடியும் கோலும் உடையவன் மன்னன் எனப்பட்டான்.
4. மக்களுக்காக மன்னன் என்ற நிலை மாறி, மன்னனுக்காக மக்கள் என்ற நிலை ஏற்பட்டது.
5. மன்னனைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற மூட நம்பிக்கை வளர்ந்தது.
6. பலகையும், பலப்பமுமே உயர்ந்தன என எண்ணுவதும் முடியும் கோலும் மன்னன் என்று எண்ணுவதும் முதல் தடுமாற்றம்.

www.kalvisolai.com
ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்

9. ஓவியக்கலைகளை காணலாகும் இடங்கள்

1. கோயில்களின் நுழைவு வாயிலின் இரண்டு பக்கங்களிலும்
2. கருப்ப இல்லின் சுவர்களிலும்
3. சுற்றாலைகளிலும், விதானத்திலும் காணலாம்.
4. மாமண்டூர்க் குகைகளின் வெளிமண்டபம்.
5. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில்.
6. பனமலையில் உள்ள மண்டபத்தில் உள்ள ஆடலழகிகள் ஓவியம் மிகச் சிறப்பு.
7. ஆடலழகியின் ஓவியத்தின் வண்ணச்செறிவும், உணர்ச்சிப் பொலிவும் காண்பவர் உள்ளத்தைக் கவர்கின்றன.

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் :

1. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் சோழர்காலம்
2. செம்பியன் மாதேவி போன்ற சோழப்பேரரசிகள் செப்புத்திருமேனிகள் செய்தளிப்பதை தம் பிறவிப்பயன் என எண்ணினர்.
3. சோழர்கால் செப்புத்திருமேனிகள் கலையழகும், கடவுள் தன்மையும், உயிரோட்டமும் கொண்டவை.
4. ஆகம நூல்களில் சொல்லப்பட்ட விதிப்படி சிவன், திருமால் மூர்த்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
5. ஒவ்வொரு சிலையிலும் அக்காலச் சிற்பியின் கைவண்ணம் பளிச்சிடுவதை காணலாம்.

III. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் 1 X 6 = 6

11. அ. ஒற்றுமை உணர்வு :

1. தமிழ் மாந்தர் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் போல அன்பு வாழ்க்கை வாழ்ந்தனர்.
2. மொழியால், இனத்தால், நாட்டால் ஒருமைப்பாட்டுணர்வு கொண்டு விளங்கினர்.
3. ' யாதும் ஊரே யாவரும் கேளிர் ' என்பது அவர்கள் கொள்கை.
4. நிலைத்த தொழில்களாலும் கலையாத உறவின் முறைகளாலும் கவலையின்றி வாழ்ந்தனர்.

ஆ. தமிழ் மாந்தரின் ஈகை :

1. தன் முயற்சியால் உழைத்து வாழும் மேன்மையான கொள்கையைக் கடைப்பிடித்தனர்.
2. ஒரு முயற்சியுமில்லாமல் பிச்சையெடுத்து உண்ணும் இழிதொழிலை விரும்பில்லை.
3. முயற்சி செய்ய இயலாத உறுப்பறைகள், பிணியாளர் பிறரிடம் பொருள் ஏற்று வாழ்ந்தனர்.
4. கால்முடப்பட்டோர், பார்வையற்றோர், பேசும் திறனற்றோர் ஆதரவு பெறுவதற்கு உரியர் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

www.kalvisolai.com
ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்